## மணப்பாக்கம் குடிநீர் அபிவிருத்தி திட்டம்

- மணப்பாக்கம் குடிநீர் வழங்கல் திட்டம், ரூ.10.92 கோடி மதிப்பீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வந்தது. ஒப்பந்ததாரரின் மோசமான செயல்திறனால் ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது. மீதமுள்ள பணிகளை மேற்கொள்ள ரூ.11.79 கோடிக்கு மறு ஒப்பந்தம் கோரப்பட்டது.

- **குடிநீர் அபிவிருத்தித் திட்டம் கீழ்கண்ட முக்கிய பணிகளைக் கொண்டுள்ளது.**
  - 23972 மீ. நீளத்திற்கு பகிர்மான குழாய்கள் பதிக்கும் பணிகள்.
  - 3030 மீ. நீளத்திற்கு உந்து குழாய்கள் பதிக்கப்படும் பணிகள்.
  - 3509 வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கும் பணிகள்.
  - **கீழ்நிலை / மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமையும் இடங்கள்:**

    மேக்ரோ மார்பிள் தெரு

    | | |
    |---|---|
    | கீழ்நிலை | 2 இலட்சம் லிட்டர் |
    | மேல்நிலை | 11 இலட்சம் லிட்டர் |

- **ஒப்பந்தத்தின் விவரங்கள்:**

- ஒப்பந்த பணிகள் ரூ.1005 இலட்சத்திற்கு 24 மாதத்தில் பணி முடிக்க M/s. GKC Vishwa Consortium 21.08.2013 அன்று கொடுக்கப்பட்டது. இப்பணி 21.02.2014 அன்று தொடங்கப்பட்டு, 20.02.2016 அன்று முடிக்க உத்தேசிக்கப்பட்டது. ஒப்பந்த காலம் நீடிக்கப்பட்டு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வந்தது. ஒப்பந்ததாரரின் மோசமான செயல்திறனால் 10.11.2018 அன்று ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது. மீதமுள்ள பணிகளை மேற்கொள்ள மறு ஒப்பந்தம் கோரப்பட்டு ரூ. 840.81 இலட்சத்திற்கு பணி ஆணை M/s.Keyem Engineering Enterprises-க்கு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

- **பணிகளின் தற்போதைய நிலை**

  1) தற்போது 88 விழுக்காடு பணிகள் முடிவடைந்துள்ளது.

  2) இது வரை இத்திட்டத்திற்கு ரூ.12.53 கோடி நிதி செலவிடப்பட்டுள்ளது.

  3) அனைத்து பணிகளையும் 30.06.2022 க்குள் முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

  4) இத்திட்டத்தின் மூலம் சுமார் 21,100 மக்கள் பயன் பெறுவார்கள்.